-வாழ்வோம்

திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

145

புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா!

உயிர்பெற்ற சூழலியல் நிலம்!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

'தொல்காப்பியப் பூங்கா'. 2008-ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 2011-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

சென்னை நகருக்குள் 58 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய, சூழலியல் ஈரநிலமாக இருந்தது அடையாறு உப்பங்கழி. அதை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் சீரமைத்து, 'தொல்காப்பியப் பூங்கா' அமைத்ததன் மூலம் பெரும் பணியினை நிறைவேற்றி இருந்தார் கலைஞர்.

ஆனால், அதன்பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தப் பூங்காவைப் பராமரிக்காமலும், பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்காமலும், சிதிலமடைய வைத்தனர். 10 ஆண்டுகளுக்குப் பின்னர், திராவிட மாடல் அரசு அமைந்ததும், தொல்காப்பியப் பூங்காவை மேம்படுத்திடும் அறிவிப்பை வெளியிட்டார், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலமாக 'தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டு' பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, பணிகளை மேற்கொள்வதற்கு, ஜூலை 2021-ஆம் ஆண்டு அரசு அனுமதி வழங்கியது. 42.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வந்த மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து, 24.10.2025 அன்று, முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

உயிர்பெற்ற சூழலியல்

நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்புக் கோபுரம், பார்வையாளர் மாடம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட என பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா மீண்டும் உயிரோட்டமான சூழலியல் இடமாக மாற்றம் பெற்றுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொல்காப்பியப் பூங்கா பகுதி-1 மற்றும் பகுதி- 2 ஆகியவற்றை இணைத்து, சாந்தோம் சாலையில் உயர்மட்ட நடைமேம்பாலம் (Skywalk) மற்றும் டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையின் குறுக்கே இருக்கும் குழாய் கால்வாய்க்கு மாற்றாக, மூன்று வழிப் பெட்டகக் கால்வாய் (Triple Cell Box Culvert) அமைக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வகையில், அமைக்கப்பட்டிருந்த 3.20 கிலோ மீட்டர் தூர நடைப்பயிற்சிப் பாதை, சீரமைக்கப்பட்டு, 2022-ஆம் ஆண்டில், மே மாதம் முதல் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். புதுப்பிக்கப்பட்ட பூங்கா திறந்த வகையில், சுமார் 25 ஆயிரம் பேர் அதை பயன்படுத்தி இருந்தனர். இந்த நிலையில், தற்போது காலை, மாலை இரண்டு நேரத்திலும் கட்டண அடிப்படையில், இயற்கைச் சூழலில் இங்கு நடைப்பயிற்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கு முன்பதிவு

தொல்காப்பியப் பூங்காவினை பொதுமக்கள் பார்வையிட, ஒரே நேரத்தில் அதிகபட்சமாக 100 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதால், இணையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும் பொது விடுமுறை நாட்கள் தவிர, இணையதள முன்பதிவின் மூலம் பார்வையிடலாம்.

இவை தவிர, 'தொல்காப்பியப் பூங்கா', சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாகச் செயல்பட்டு, சுற்றுச்சூழல் கல்வி விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் வகையில், திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், பள்ளி, கல்லூரிகள் சார்பில் கலந்து கொள்ள அதிகபட்சம் 100 மாணவர்கள் ஆசிரியர்களுடன் அனுமதிக்கப்படுவர். இணையதளம் வழியாக முன்பதிவு செய்து, திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை பார்வையிடலாம்.

தொல்காப்பியப் பூங்காவைத் திறந்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சுற்றுச்சூழல் கல்வியினை அறிந்து கொள்ளும் வகையில், மாணவர்களுக்கான பிரத்யேக சுற்றுச்சூழல் கல்விச்சுற்றுலா (Student's Eco-Tour) ஏற்பாடு செய்ய வழிகாட்டுதல் வழங்கியுள்ளார். மேலும், பூங்காவைப் பார்வையிடும் அனைத்து மாணவர்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க சிற்றுண்டி வழங்கவும் அறிவுறுத்தி இருக்கிறார்.

https://www.crrt.tn.gov.in இந்த இணையதளம் வழியாக, முன்பதிவு செய்யவும், கட்டண விவரங்களையும் அறியலாம். திராவிட மாடல் அரசு சூழலியலில் கவனம் கொள்ளும் அரசு என்பது தொல்காப்பியப் பூங்கா வழி மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

...சாதனை தொடரும்

> பூங்காவைப் பார்வையிடும் அனைத்து மாணவர்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க சிற்றுண்டி வழங்கவும் அறிவுறுத்தி இருக்கிறார்.

பள்ளிகள் அனுமதிக்கப்படும் நாட்கள்!

சென்னை மாநகராட்சி பள்ளிகள் - செவ்வாய்க்கிழமை மற்றும் சனிக்கிழமை

அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகள் - வெள்ளிக்கிழமை

தனியார் பள்ளிகள் - திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை.

பூங்காவின் பராமரிப்புக்காக வியாழக்கிழமை விடுமுறை.

நடைபயிற்சி அனுமதி!

திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை அனைத்து நாட்களும் (பொது விடுமுறை நாட்கள் உட்பட) காலை 6.30 மணி முதல் 8.00 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலும் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒரு நாள் கட்டணம் ரூ.20, ஒரு மாதத்துக்கு ரூ.500, ஆறு மாதங்களுக்கு ரூ. 2,500, ஆண்டு கட்டணம் ரூ.5,000 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அறிவார்ந்த ஆவணம் - முன்பதிவு அழைப்பு!

கடந்த 100 ஆண்டு கால தமிழ்நாட்டின் வரலாற்றில், கழகத்தின் அரசியல் - பண்பாட்டுப் பயணமே தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கான அடையாளமாக உள்ளது. அந்த வரலாற்றைத் தொகுக்கும் மிக முக்கிய முயற்சியாக, இளைஞர் அணி நடத்தி வரும் முத்தமிழறிஞர் பதிப்பகம் வழியாக உருவாகியுள்ள நூல் 'காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு'.

தமிழ்நாட்டில் முக்கிய ஆளுமைகளாகத் திகழும் ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் என 80 பேர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தேசிய அளவில் இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் என பலரும், தி.மு.கழகத்தின் ஜனநாயக பங்களிப்பினை, இந்நூலில் மிக விரிவாகப் பதிவு செய்துள்ளனர்.

அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கலை - இலக்கியம் என ஒவ்வொரு துறையிலும் கழகம் நிகழ்த்திய மாற்றங்களை, வளர்ச்சியைத் தரவுகளோடு, உணர்வுகளோடு விவரிக்கும் இந்த நூலுக்கு முன்பதிவினை முத்தமிழறிஞர் பதிப்பகம் அறிவித்துள்ளது.

1120 பக்கங்கள், கெட்டி அட்டை தரத்திலான இந்த நூலின் விலை ரூ.750. நவம்பர் 8 வரை, முன்பதிவு விலையாக ரூ.600 அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்து பணம் செலுத்திய பின், அதனை ஸ்கிரீன் ஷாட் எடுத்து 88071-93390 எண்ணுக்கு அனுப்பி வைக்கவும். அறிவார்ந்த ஆவணம் உங்கள் கைகளில் சேரட்டும்!

ஃப்ளாஷ்பேக்

தலைவரிடம் பெற்ற வாழ்த்து!

எம்.முத்துராமலிங்கம்

1992-ஆம் ஆண்டு ஒன்றுபட்ட மதுரை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக தலைவர் கலைஞர் என்னை நியமித்தார். அப்போது துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களையும் அழைத்து வந்து, நானும் அவர்களும் தலைவரை அன்பகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றோம். பேராசிரியர் அவர்களும், ஆற்காட்டார் அவர்களும் அப்போது உடனிருந்தனர். அன்றைய இளைஞர் அணிச் செயலாளரான கழகத் தலைவர் அவர்கள் கலைஞரிடமும், பேராசிரியரிடமும் எங்களை அறிமுகப்படுத்தி வைத்த நொடிகள், இப்போதும் நெஞ்சில் நிழலாடுகின்றன. அப்போது எடுத்த குழு புகைப்படம் இது.

- எம்.முத்துராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., விவசாய அணி மாநில இணைச் செயலாளர், மதுரை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

நினைவூட்டு

'போர் தொடுத்து விட்டோம், பயணம் நிற்காது!'

1953-ஆம் ஆண்டு, ஜூலை 15-ஆம் தேதி கல்லக்குடி போராட்டத்தில் தடியடி, துப்பாக்கிச் சூட்டினைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் போராடிய 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். 'போர் தொடுத்து விட்டோம், பயணம் நிற்காது' என்றது திராவிட நாடு. கல்லக்குடி போராட்டக் களம் மீண்டும் சி.பி.சிற்றரசு தலைமையில் நூறு நாட்களுக்கு மேல் தொடர்ந்து நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131